<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | சேகர் | நாள் | 08.07.2022 |
| தகப்பனார் பெயர் | குப்புசாமி | | |

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

1) எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. துரைசாமி, கோபால் வகையறா ஆகியோர்கள் சேர்ந்து மாரியப்பன் வகையறா மீது நிலத்தை அபகரித்துக்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் அனைவரும் என் உறவினர்கள் என்றால், இல்லை. நாங்கள் அனைவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். 4–ம் வாதியின் மகளை நான் திருமணம் செய்துகொண்டிருக்கிறேன் என்று சொன்னால், சரிதான்.

2) என் பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள சர்வே எண் மற்றும் செக்குபந்தி விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். சர்வே எண்.848 தற்போதும் அவ்வாறேதான் உள்ளதா என்றால், இல்லை. அதை சர்வே எண்.848/A மற்றும் 848/B என்று பிரித்துள்ளதாக இந்த வழக்கில் பிரச்சனை ஏற்பட்ட சமயத்தில் தெரிந்துகொண்டேன்.

3) மேற்படி சர்வே உட்பிரிவுகளில் எந்த உட்பிரிவு வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்.848 ஆனது 2009 ம் ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது. வாதிகளும் அவ்வாறுதான் அவர்களது வழக்குரையிலும் கூறியுள்ளனர்.

4) என் பிரமாண வாக்குமூலத்தில் 4 ம் பத்தியில் சொல்லியுள்ள கிரயத்தில் நானோ, என் பெற்றோரோ சாட்சிகள் இல்லை என்று சொன்னால், சரிதான். மேற்படி கிரயம் குறித்து 4 ம் வாதி சொல்லிதான் எனக்கு விவரம் தெரியும். எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், தாவா சொத்தை கிரயம் பெற்ற தேதியிலிருந்து வாதிகள் அனுபவித்து வருவதாக 4 ம் வாதி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றாலும், 4 ம் வாதியின் மருமகன் என்பதால் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

5) தாவா சொத்துக்குரிய பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை துரைசாமி மற்றும் கோபாலன் பெயரில் உள்ளது. அந்த பட்டா எண் எனக்கு தெரியாது. மேற்படி பட்டா

சர்வே எண்.848/A க்கு கொடுக்கப்பட்டுள்ளதா அல்லது சர்வே எண். 848/B க்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ஆறுமுகம். மேற்படி ஆறுமுகம் 1ம் பிரதிவாதியின் வீட்டில்தான் சுமார் 50 வருடமாக வசித்து அங்குதான் இறந்தார் என்று சொன்னால், சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மேற்படி ஆறுமுகம் 1ம் பிரதிவாதியின் வீட்டில்தான் வசித்து வந்தார் என்று சொன்னாலும், சரியல்ல. அவர் 1ம் பிரதிவாதியின் பக்கத்தில் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டில்தான் வசித்து வந்தார்.

6) வாதிகள் அனைவரும் காளியப்பன் என்பவரின் வாரிசுகள் என்றால், சரிதான். தாவா சொத்துக்கான பட்டா 1, 4–வது வாதிகள் பெயரில்தான் உள்ளது என்றால், சரிதான். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் தாவா சொத்தை அளந்தபோது குறிப்பிட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால், சரிதான். நில அளவையர் சர்வே எண்.848 ல் உட்பிரிவு A ஐ அளந்தாரா? அல்லது உட்பிரிவு B ஐ அளந்தாரா? என்ற விவரம் எனக்கு தெரியாது.

7) என் பிரமாண வாக்குமூலத்தில் 1, 2 பிரதிவாதிகள் வடமேற்கு பகுதியில் 6 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்துள்ளார்கள் என்று நான் சொல்லியுள்ளது தவறானது என்றால், சரியல்ல. மேற்படி நிலத்தை பிரதிவாதிகள் ரொசாரியோ என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளனர் என்று சொன்னால், சரிதான்.

8) 4ம் வாதி என் மாமனார் என்பதால் இவ்வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. 4ம் வாதியின் அறிவுறுத்தலின்படிதான் நான் என் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம்/–திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.